**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, (FTC) ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**STC.No. 13/2023 P.W. 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. அந்தோணிராஜ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **த/பெ. பனிச்சிலுவை** | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 02.02.2024**

**புகார்தாரர் தரப்பு முதல் விசாரணை**

நான் தற்சமயம் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் புகார்தாரர் எனது அண்ணன் மனைவி ஆவார் நான் புகார்தாரர் தரப்பு 2 வது சாட்சியாவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண ஆணை உறுதி ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகளை எனது தரப்பு சாட்சியமாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நீதிமன்றத்தை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே, புகார்தாரர் தாக்கல் செய்த புகாரின் அடிப்படையில் அவர் கேட்ட பரிகாரத்தை வழங்க வேண்டுமென்று நீதிமன்றத்தை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. என் வீட்டிற்கும் எனது மதனி வீட்டிற்கும் இடையே 10 கி.மீ தூரம் இருக்கும். குற்றம் சுமத்தப்பட்ட நபர் சென்னையில் வேலை பார்த்து வரும் விவரம் எனக்கு தெரியாது. அவர் குடும்ப பிண்ணணி பற்றியும் எனக்குத் தெரியாது. மேற்படி நபர்களுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். புகார்தாரர் எனது உறவினர் என்பதற்காக அவருக்கு ஆதராவாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

**நீதித்துறை நடுவர்,**
**விரைவு நீதிமன்றம்,**
**இரணியல்.**